# இலங்கையில் மீள்நல்லிணக்கம் பற்றிய மக்கள் அபிப்பிராயம்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - சோஷல் இன்டிகேட்டர்

மே 2024

## உள்ளடக்கம்

அறிமுகம்........................................................................................................ 4

முறைமையியல்................................................................................................. 4

பிரதான முடிவுகளின் சுருக்கம் ........................................................................ 5

பிரதான முடிவுகள் ........................................................................................... 5

பொருளாதார நடவடிக்கைகளுக்கான வாய்ப்புக்கள் ........................................ 5

வரைபு 01: 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த காலத்துடன் ஒப்பிடும்போது, உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் வாழும் மக்களுக்குக் கிடைக்கும் பொருளாதார வாய்ப்புகளை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய மற்றும் இனம்..........6

வரைபு 02: 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த காலத்துடன் ஒப்பிடும்போது, உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் வாழும் மக்களுக்குக் கிடைக்கும் பொருளாதார வாய்ப்புகளை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - வயது, பிரதேசம் மற்றும் பாலினம் ..........6

வரைபு 03: மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய..........7

வரைபு 04: மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - இனம்..........7

வரைபு 05: மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய ..........8

அட்டவணை 01: மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - மதம்..........8

கல்விக்கான வாய்ப்புக்கள் ..........................................................................9

வரைபு 06: 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுடன் ஒப்பிடும்போது, உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் வசிக்கும் மக்களுக்குக் கிடைக்கும் கல்வி வாய்ப்புகளை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய மற்றும் இனம்..........9

வரைபு 07: 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுடன் ஒப்பிடும்போது, உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் வசிக்கும் மக்களுக்குக் கிடைக்கும் கல்வி வாய்ப்புகளை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - வயது, பிரதேசம் மற்றும் பாலினம்..........9

வரைபு 08: மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய..........10

வரைபு 09: மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - இனம்..........10

வரைபு 10: மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய..........11

அட்டவணை 02: மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - மதம்..........11

பாதுகாப்பு/ பாதுகாப்பின்மை தொடர்பான உணர்வு....12

வரைபு 11: அன்றாட நடவடிக்கைகள், மதச் சடங்குகள்/ மதச் செயற்பாடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பை உணர்தல் - தேசிய....12

அட்டவணை 03: அன்றாட நடவடிக்கைகள், மதச் சடங்குகள்/ மதச் செயற்பாடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பை உணர்தல் இனம்....12

அட்டவணை 04: அன்றாட நடவடிக்கைகள், மதச் சடங்குகள்/ மதச் செயற்பாடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பை உணர்தல் மதம்....13

அட்டவணை 05: அன்றாட நடவடிக்கைகள், மதச் சடங்குகள்/ நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பை உணர்தல் -இனம்....13

அரசியல் இடைத்தொடர்பு ....13

வரைபு 12: இலங்கையில் அனைத்து இன குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - தேசிய....14

வரைபு 13: இலங்கையில் அனைத்து இன குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - இனம்....14

வரைபு 14: இலங்கையில் அனைத்து இன குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - வயது, பிரதேசம் மற்றும் பாலினம்....15

வரைபு 15: இலங்கையில் அனைத்து மதக் குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - தேசிய....15

அட்டவணை 06: இலங்கையில் அனைத்து மதக் குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - மதம்....16

வரைபு 16: இலங்கையில் அனைத்து மதக் குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - வயது, பிரதேசம் மற்றும் பாலினம் ....16

அரசியல் தலைமைத்துவம் மீதான அபிப்பிராயம்....16

வரைபு 17: அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட அரசியல் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக/ உண்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - தேசிய....17

வரைபு 18: அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட அரசியல் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக/ உண்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - இனம்....17

வரைபு 19: அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட அரசியல் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக/ உண்மையாக செயற்படுகின்றனர் என நீங்கள் நினைக்கிறீர்கள்? - வயது, பிரதேசம் மற்றும் பாலினம்....18

மதத் தலைவர்கள் மீதான அபிப்பிராயம்....18

வரைபு 20: அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட மதத் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக/ உண்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - தேசிய....19

அட்டவணை 07: அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட மதத் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக/ உண்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - மதம்....19

வரைபு 21: அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட மதத் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக/ உண்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - வயது, பிரதேசம் மற்றும் பாலினம்....20

## அறிமுகம்

இவ் அறிக்கையானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கணக்கெடுப்பு ஆய்வுப்பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் மேற்கொள்ளப்பட்ட மீள்நல்லிணக்கம் தொடர்பான ஆய்வின் பிரதான முடிவுகளை முன்வைக்கின்றது. இலங்கையின் ஜனநாயகம் மற்றும் மீள்நல்லிணக்கம் தொடர்பான விடயக் கருப்பொருள்கள் தொடர்பான பொதுமக்களின் தற்போதைய கருத்துக்களை அறிந்து கொள்ளும் நோக்கில் இவ் ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம் மற்றும் கல்வி என்பவற்றின் வளர்ச்சி, பாதுகாப்பு, அரசியல் இடைத்தொடர்புகள் மற்றும் அரசியல் மற்றும் மத தலைமைத்துவங்கள் ஆகிய விடயங்கள் தொடர்பான ஆய்வு முடிவுகள் இந்த சுருக்கமான அறிக்கையில் பேசப்படுகின்றது

2024 ஆம் ஆண்டு இலங்கையில் சிவில் யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகள் கடந்துவிட்டதை குறித்து நிக்கின்றது. 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள், யுத்தத்தினால் பாதிப்படைந்த சமூகங்களுக்கு இடையில் மீள்நல்லிணக்கத்தினை அடைவதற்கு ஏற்ப செயற்பட்டு வருவதாக தெரிவித்து வருகின்றது. அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மேலதிகமாக, சிவில் சமூக அமைப்புக்களும் நாட்டில் மீள்நல்லிணக்கத்தை மேம்படுத்துவதிலும், நிலையான சமாதானத்தை கொண்டுவருவதிலும் அதிக முன்முனைவுகளில் ஈடுபட்டுள்ளது. இவ்வாறான பின்புலத்தில், மாற்றுக் கொள்கைக்கான நிலையம் - சோஷல் இன்டிகேட்டரினால் 30 வருடங்களுக்கு மேலாக இன மோதலினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கிடையில் மீள்நல்லிணக்கமானது எவ்வளவு தூரம் அடையப்பட்டுள்ளது என்பதனை பரீட்சிப்பதற்கு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மீள்நல்லிணக்கமானது இன்னும் முடிவடையாத பணியாகவே உள்ளதுடன், இந்த ஆய்வானது நிலைத்த சமாதானம் மற்றும் மீள்நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ள கொள்கை வகுப்பாளர்கள், பல்வேறுபட்ட பங்குதாரர்கள் ஆகியோரின் உண்மையான முயற்சிகளுக்கு உந்துதலாக அமையும்.

## முறைமையியல்

இந்த கணக்கெடுப்பு ஆய்வானது, நாட்டின் 25 மாவட்டங்களிலும் உள்ள சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய பிரதான நான்கு இனச் சமூகங்களையும் சேர்ந்த 1372 நபர்களுடன் மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு கட்ட எழுமாற்று முறையை பயன்படுத்தி பதிலளிப்பவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட கேள்வித்கொத்தைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கணக்கெடுப்பு ஆய்வுக்கான வெளிக்களப்பணியானது 2024 பிப்ரவரி 19ஆம் திகதி முதல் மார்ச் 13ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் பிரதான நான்கு இனச் சமூகங்களைச் சேர்ந்த 74 வெளிக்கள கணக்கெடுப்பாளர்கள் (ஆண் மற்றும் பெண்) ஈடுபடுத்தப்பட்டனர். தரவு சேகரிப்பு செயன்முறையின் முடிவில், மக்களின் மாவட்ட மற்றும் இன ரீதியான உண்மையான விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தரவுத் தொகுப்பு நிறையேற்றப்பட்டது. சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளியியல் தொகுப்பைப் (SPSS) பயன்படுத்தி தரவுத் தொகுப்பு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

## பிரதான முடிவுகளின் சுருக்கம்

இலங்கையர்களில், அனைத்து இனக் குழுக்களையும் சேர்ந்த அதி பெரும்பான்மையானவர்கள் அவர்களின் அன்றாட செயற்பாடுகளில் ஈடுபடுவதல், மதச் சடங்குகள்/ செயற்பாடுகளில் ஈடுபடுதல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ஆகிய விடயங்கள் தொடர்பில் பாதுகாப்பாக உணர்வதாக ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றது. அத்தோடு, இலங்கையில் உள்ள அனைத்து இனத்தவர்களும் தற்போது சமாதானமாக வாழ முடியும் என்ற கருத்தினை அனைத்து இனக் குழுக்களும் ஏற்றுக்கொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்தப் புரிதல் குறிப்பாக இளம் வயதினராக யுத்த கால அனுபவம் பெற்ற ஆண், பெண் ஆகிய இரு சாரார் மத்தியில் காணக்கூடியதாக உள்ளது. மீள்நல்லிணக்கம் தொடர்பில் நம்பிக்கை இருந்த போதிலும், பொருளாதார வாய்ப்புக்களானது இனச் சமூகங்க அடிப்படையில் அசமத்துவமான அணுகலைக் கொண்டிருப்பதாக இனச் சமூகங்கள் நம்புவதை ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது.


மேலும், பொருள்சார் அபிவிருத்தி தொடர்பில் மக்கள் நேர்நிலையான மதிப்பீட்டினை வெளிப்படுத்திய போதிலும், தேசிய மட்ட அரசியல் தலைமைத்துவம் மீது முழுமையாக நம்பிக்கையற்ற நிலைமையையும், மற்றும் தேசிய மட்ட கலாசார தலைமைத்துவம் - மதத் தலைமைத்துவம் மீது ஓரளவு நம்பிக்கையற்ற நிலைமையையும் வெளிப்படுத்தினர்.

## பிரதான முடிவுகள்


### பொருளாதார நடவடிக்கைகளுக்கான வாய்ப்புக்கள்

பொதுவான கருத்து நிலைக்கு மாறாக, இலங்கையர்களில் ஏறக்குறைய அரைவாசியினர் 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விடவும் பொருளாதார வாய்ப்புக்கள் குறைந்துள்ளது என உணர்கின்றனர். யுத்தம் நிறைவடைந்ததில் இருந்து, அனைத்து உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மற்றும் போக்குவரத்துகளுக்கான வாய்ப்புக்கள் அதிகரித்த போதிலும், மிகவும் கவனிக்கத்தக்கது, அரைவாசிக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் பொருளாதார வாய்ப்புக்களின் முன்னேற்றத்தினை அடையாளம் காணவில்லை என்ற விடயமே ஆகும். இந்தக் கருத்தினை ஏனைய இனத்துவ குழுக்களை விடவும் தமிழ் சமூகத்தினர் பகிர்ந்து கொள்வதானது இந்த விடயம் தொடர்பிலான புதிரை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. தமிழ் சமூகத்தில் கிட்டத்தட்ட 56% மானவர்களும், 49மூ ஆன சிங்கள சமூகத்தினரும் 47% ஆன முஸ்லிம் சமூகத்தினரும் 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விடவும் குறைந்த வாய்ப்புக்களை அனுபவிப்பதாக குறிப்பிடுகின்றனர். வரைபு 2 இன் படி, 15 வருடத்திற்கு முன்னர், யுத்த காலத்தில் இளவயதினராகவும் (தற்போது 31லிருந்து 45 வயதினர்கள்), பெரியவர்களாகவும் (தற்போது 46 மற்றும் அதற்கு மேல் வயதுடையவர்கள்) இருந்த இரு வயது பிரிவினரும் தற்போது மக்கள் குறைந்தளவிலான பொருளாதார வாய்ப்புக்களையே அனுபவிக்கின்றனர் என்று தெரிவிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. மேலும், கிராமப்புற மற்றும் பெண்களுடன் ஒப்பிடுகையில் நகர்ப்புற ஆண்கள் மேற்படி கருத்தை உணர்வதாக தெரிகின்றது. (வரைபு 01 மற்றும் 02 இனை பார்க்கவும்)

வரைபு 01: 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த காலத்துடன் ஒப்பிடும்போது, உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் வாழும் மக்களுக்குக் கிடைக்கும் பொருளாதார வாய்ப்புகளை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய மற்றும் இனம்





வரைபு 02: 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த காலத்துடன் ஒப்பிடும்போது, உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் வாழும் மக்களுக்குக் கிடைக்கும் பொருளாதார வாய்ப்புகளை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - வயது, பிரதேசம் மற்றும் பாலினம்




ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் தமது இனச் சமூகத்திற்கான பொருளாதார வாய்ப்புக்களுக்கான அணுகல் தொடர்பில் மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்று அவர்களின் தனிப்பட்ட அனுபவங்கள் தொடர்பில் ஆய்வில் கேட்கப்பட்டது. தமிழ் மற்றும் மலையகத் தமிழ் சமூகத்தவர்கள் ஒப்பீட்டளவில் தமக்கு, பொருளாதார வாய்ப்புக்களுக்கான அணுகல் குறைவாகவே இருப்பதாகத் தெளிவாக குறிப்பிடுக்ன்றார்கள்.

சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களின் பெரும்பான்மையானவர்கள் ஏனைய இனக் குழுக்களுடன் ஒப்பிடும் போது, அதிகமான அல்லது சமனான பொருளாதார வாய்ப்புக்களை அனுபவிப்பதாக உணர்கின்றனர். (வரைபு 03 மற்றும் 04 இனை பார்க்கவும்)

வரைபு 03: மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய





வரைபு 04: மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - இனம்



மேலும் ஆய்வானது ஏனைய மத சமூகங்களுடன் ஒப்பிடுகையில் தமது மத சமூகத்தினருக்கு பொருளாதார வாய்ப்புக்களுக்கான அணுகல் பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்பது தொடர்பில் இந்த ஆய்வில் ஆராயப்பட்டது.

பௌத்தர்கள் அவர்களின் சமூகங்கள் ஒன்றில் அதிகமான அல்லது சமனான பொருளாதார வாய்ப்புக்களுக்கான அணுகலை கொண்டுள்ளதாக எண்ணுவதோடு, சிறுபான்மை மதச் சமூகங்களான ஏனைய மத சமூகங்கள் ஒப்பீட்டளவில் தமக்கு குறைந்தளவிலான பொருளாதார வாய்ப்புக்களே உள்ளதாக குறிப்பிடுகின்றனர். (வரைபு 05 மற்றும் அட்டவணை 01 இனை பார்க்கவும்)

வரைபு 05: மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய




அட்டவணை 01: மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - மதம்


| | பௌத்தம் | இந்து | இஸ்லாம் | கிறிஸ்தவம் (ரோமன் கத்தோலிக்கம்) | கிறிஸ்தவம் (ரோமன் கத்தோலிக்கம் அல்லாத) |
|---|---|---|---|---|---|
| அதிக அணுகல் | 31.6% | 8.6% | 14.2% | 35.7% | 36.4% |
| சமமான அணுகல் | 38.7% | 33.3% | 46.5% | 38.1% | 18.2% |
| குறைவான அணுகல் | 25.3% | 54.3% | 33.9% | 26.2% | 45.5% |
| தெரியாது | 4.4% | 3.8% | 5.5% | 0.0% | 0.0% |
| பதிலளிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை | 1004 | 186 | 127 | 42 | 11* |

*பதிலளிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை மிகவும் குறைவு


## கல்விக்கான வாய்ப்புக்கள்

யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, சகல இனத்துவ குழுக்களினதும் கல்வி வாய்ப்புகளுக்கான அணுகல் அதிகரித்துள்ளதாக ஆய்வு முடிவுகள் தெளிவாக காட்டுகின்றது. இந்தக் கருத்தானது ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையிலும், கிராமப்புற, நகர்ப்புற மற்றும் வேறுபட்ட வயதுப் பிரிவினர்களிடமும் பகிர்ந்து காணப்படுகின்றது. (வரைபு 06 மற்றும் 7இனை பார்க்கவும்)

வரைபு 06: 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுடன் ஒப்பிடும்போது, உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் வசிக்கும் மக்களுக்குக் கிடைக்கும் கல்வி வாய்ப்புகளை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய மற்றும் இனம்





வரைபு 07: 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுடன் ஒப்பிடும்போது, உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் வசிக்கும் மக்களுக்குக் கிடைக்கும் கல்வி வாய்ப்புகளை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - வயது, பிரதேசம் மற்றும் பாலினம்




ஏனைய இனத்துவ சமூகங்களுடன் ஒப்பிடுகையில், தமது சொந்த இனத்துவ சமூகத்தின் கல்விக்கான அணுகலை மதிப்பீடு செய்யுமாறு கேட்ட போது, மலையகத் தமிழ் சமூகத்தைத் தவிர, ஏனைய இன சமூகங்களின் (சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம்) பெரும்பான்மையானவர்கள், ஏனைய இன சமூகங்களுடன் ஒப்பிடும் போது அவர்களது இன சமூகம் அதிகமான அல்லது சமனான அணுகலைக் கொண்டிருப்பதாக உணர்கின்றனர். (வரைபு 08 மற்றும் 09 பார்க்கவும்)

வரைபு 08: மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய





வரைபு 09: மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - இனம்



ஏனைய மத சமூகங்களுடன் ஒப்பிடுகையில், தமது சொந்த மதச் சமூகத்தின் கல்விக்கான அணுகலை மதிப்பீடு செய்யுமாறு கேட்ட போது, அதி பெரும்பான்மையான பௌத்தர்கள், இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்கள், ஏனைய மத சமூகங்களுடன் ஒப்பிடும் போது தமது மத சமூகத்திற்கு அதிகமான அல்லது சமனான அணுகல் இருப்பதாக உணர்கின்றனர். (வரைபு 10 மற்றும் அட்டவணை 02 இனை பார்க்கவும்)

வரைபு 10: மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய




அட்டவணை 02: மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - மதம்


| | பௌத்தம் | இந்து | இஸ்லாம் | கிறிஸ்தவம் (ரோமன் கத்தோலிக்கம்) | கிறிஸ்தவம் (ரோமன் கத்தோலிக்கம் அல்லாத) |
|---|---|---|---|---|---|
| அதிக அணுகல் | 37.5% | 37.6% | 35.2% | 37.2% | 40.0% |
| சமமான அணுகல் | 44.0% | 40.3% | 49.2% | 37.2% | 60.0% |
| குறைவான அணுகல் | 12.5% | 18.3% | 13.3% | 25.6% | 0.0% |
| தெரியாது | 6.0% | 3.8% | 2.3% | 0.0% | 0.0% |
| பதிலளிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை | 1004 | 186 | 128 | 43 | 10* |

*பதிலளிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை மிகவும் குறைவு

## பாதுகாப்பு/ பாதுகாப்பின்மை தொடர்பான உணர்வு

மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகள், மத சடங்குகள், செயற்பாடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பில் பாதுகாப்பாக உணர்கின்றனர் மற்றும் அது அனைத்து இனத்துவ குழுக்களிடமும் வெளிப்படுவதோடு, அதி பெரும்பான்மையானவர்கள் மேற்படி நடவடிக்கைகள் தொடர்பில் பாதுகாப்பாக உணர்வதாக தெரிவிக்கின்றனர். (வரைபு 11 மற்றும் அட்டவணைகள் 03, 04, 05)

வரைபு 11: அன்றாட நடவடிக்கைகள், மதச் சடங்குகள்/ மதச் செயற்பாடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பை உணர்தல் - தேசிய




அட்டவணை 03: அன்றாட நடவடிக்கைகள், மதச் சடங்குகள்/ மதச் செயற்பாடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பை உணர்தல் - இனம்

| | சிங்களம் | தமிழ் | மலையகத் தமிழ் | முஸ்லிம் |
|---|---|---|---|---|
| பாதுகாப்பானதாக உள்ளது | 89.0% | 89.0% | 91.2% | 91.3% |
| பாதுகாப்பற்றதாக உள்ளது | 10.9% | 9.1% | 7.0% | 7.1% |
| தெரியவில்லை | 0.2% | 1.9% | 1.8% | 1.6% |
| பதிலளிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை | 1032 | 154 | 57 | 127 |

அட்டவணை 04: அன்றாட நடவடிக்கைகள், மதச் சடங்குகள்/ மதச் செயற்பாடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பை உணர்தல் - மதம்

| | பௌத்தம் | இந்து | இஸ்லாம் | கிறிஸ்தவம் (ரோமன் கத்தோலிக்கம்) | கிறிஸ்தவம் (ரோமன் கத்தோலிக்கம் அல்லாத) |
|---|---|---|---|---|---|
| பாதுகாப்பானதாக உள்ளது | 92.8% | 91.4% | 94.5% | 92.9% | 80.0% |
| பாதுகாப்பற்றதாக உள்ளது | 6.6% | 6.5% | 3.9% | 7.1% | 20.0% |
| தெரியவில்லை | 0.6% | 2.2% | 1.6% | 0.0% | 0.0% |
| பதிலளிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை | 1003 | 186 | 128 | 42 | 10* |

*பதிலளிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை மிகவும் குறைவு

அட்டவணை 05: அன்றாட நடவடிக்கைகள், மதச் சடங்குகள்/ நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பை உணர்தல் - இனம்


| | சிங்களம் | தமிழ் | மலையகத் தமிழ் | முஸ்லிம் |
|---|---|---|---|---|
| பாதுகாப்பானதாக உள்ளது | 83.6% | 79.1% | 80.7% | 88.3% |
| பாதுகாப்பற்றதாக உள்ளது | 12.7% | 15.7% | 15.8% | 7.0% |
| தெரியவில்லை | 3.7% | 5.2% | 3.5% | 4.7% |
| பதிலளிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை | 1032 | 153 | 57 | 128 |

## அரசியல் இடைத்தொடர்பு


அதி பெரும்பான்மையான இலங்கையர்கள் அனைத்து இனத்துவ குழுக்களும் (89.7%) மற்றும் மதக் குழுக்களும் (89.6%) இலங்கையில் சமாதானமாக வாழ முடியும் என எண்ணுகின்றனர். அனைத்து பிரதான இனத்துவ சமூகங்களும் இந்தக் கருத்தைக் கொண்டிருப்பதனை காணலாம். (வரைபு 12 இனை பார்க்க)

அனைத்து இனத்துவ குழுக்களையும் சேர்ந்த அதி பெரும்பான்மையானவர்கள் அனைத்து இனத்தவர்களும் இலங்கையில் சமாதானமாக வாழ முடியும் என்று பெருமளவு அல்லது ஓரளவு உணர்கின்றனர். எனினும், 14% ஆன தமிழ் மற்றும் 12% ஆன மலையகத் தமிழ் சமூகத்தினர் அனைத்து சமூகங்களும் இலங்கையில் சமாதானமாக வாழ முடியாதென உணர்கின்றனர். யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகளுக்கு பின்னர், யுத்தகாலத்தில் இளையவர்களாக இருந்த இலங்கையர்கள், அவர்களை விட பெரியவர்கள் மற்றும் இளையவர்களுடன் ஒப்பீடும் போது, அனைத்து இனத்தவர்களும் இலங்கையில் சமாதானமாக வாழ முடியும் என அதிகமாக நம்புகின்றனர். (வரைபு 12 மற்றும் 13 இனை பார்க்க)


வரைபு 12: இலங்கையில் அனைத்து இன குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - தேசிய




வரைபு 13: இலங்கையில் அனைத்து இன குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - இனம்




வரைபு 14: இலங்கையில் அனைத்து இன குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - வயது, பிரதேசம் மற்றும் பாலினம்




அனைத்து மத குழுக்களையும் சேர்ந்த அதி பெரும்பான்மையானவர்கள் அனைத்து மதத்தவர்களும் இலங்கையில் சமாதானமாக வாழ முடியும் என பெருமளவு அல்லது ஓரளவு உணர்கின்றனர். இந்தக் கருத்தினை அரைவாசியளவான இந்துக்கள் வெளிப்படுத்துகின்றனர். யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகளுக்கு பின்னர், யுத்தகாலத்தில் இளையவர்களாக இருந்த இலங்கையர்கள், அவர்களை விட பெரியவர்கள் மற்றும் இளையவர்களுடன் ஒப்பீடும் போது, அனைத்து மதத்தவர்களும் இலங்கையில் சமாதானமாக வாழ முடியும் என அதிகமாக நம்புகின்றனர். (வரைபு 15 மற்றும் 16 இனை பார்க்கவும்)

வரைபு 15: இலங்கையில் அனைத்து மதக் குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - தேசிய




அட்டவணை 06: இலங்கையில் அனைத்து மதக் குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - மதம்

| | பௌத்தம் | இந்து | இஸ்லாம் | கிறிஸ்தவம் (ரோமன் கத்தோலிக்கம்) | கிறிஸ்தவம் (ரோமன் கத்தோலிக்கம் அல்லாத) |
|---|---|---|---|---|---|
| பெருமளவு | 50.3% | 24.7% | 46.9% | 9.3% | 36.4% |
| ஓரளவு | 41.1% | 53.8% | 46.9% | 76.7% | 36.4% |
| ஒரு போதும் இல்லை | 7.1% | 15.6% | 3.1% | 9.3% | 27.3% |
| தெரியாது/ நிச்சயமில்லை | 1.5% | 5.9% | 3.1% | 4.7% | 0.0% |
| பதிலளிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை | 1003 | 186 | 128 | 43 | 11* |

*பதிலளிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை மிகவும் குறைவு


வரைபு 16: இலங்கையில் அனைத்து மதக் குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - வயது, பிரதேசம் மற்றும் பாலினம்





## அரசியல் தலைமைத்துவம் மீதான அபிப்பிராயம்

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் அரசியல் தலைமைத்துவத்துவம் எவ்வளவு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்பது தொடர்பில் பொதுமக்களின் அபிப்பிராயத்தை மதிப்பீடு செய்ய ஆய்வு முயன்றது. சமாதானத்தை நோக்கிய தேசிய மட்ட அரசியல் தலைமைத்துவங்களின் அர்ப்பணிப்பு தொடர்பில் உறுதியான சந்தேகமொன்று அனைத்து இனத்துவ சமூகங்கள் மத்தியிலும் காணப்படுவதுடன் முக்கியமாக அது சிங்களவர்கள் மத்தியில் அதிகமாக காணப்படுகின்றது. அனைத்து இலங்கையர்களும் சமாதானமான வாழ்க்கையை அடைவதில் அவர்களது தேசிய மட்ட அரசியல் தலைவர்கள் உண்மையுடன் அர்ப்பணிக்கவில்லை என 70% ஆன இலங்கையர்கள் தெரிவிக்கின்றனர். பிரதேச, வயது மற்றும் பாலின அடிப்படையிலான அனைத்துப் பிரிவினரும் இந்தக் கருத்தினை சம அளவில் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (வரைபு 17, 18, 19 இனை பார்க்கவும்)


வரைபு 17: அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட அரசியல் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக/ உண்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - தேசிய




வரைபு 18: அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட அரசியல் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக/ உண்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - இனம்



வரைபு 19: அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட அரசியல் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக/ உண்மையாக செயற்படுகின்றனர் என நீங்கள் நினைக்கிறீர்கள்? - வயது, பிரதேசம் மற்றும் பாலினம்





## மதத் தலைவர்கள் மீதான அபிப்பிராயம்

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் அரசியல் தலைவர்களுடன் ஒப்பிடும் போது, மதத் தலைவர்களின் அர்ப்பணிப்பு தொடர்பில் அதிகளவான நேர்நிலையான பாராட்டுக்கள் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் மதத் தலைவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக 58% ஆன இலங்கையர்கள் தெரிவிக்கின்ற அதே நேரம் 36% ஆனவர்கள் அந்தக் கருத்தினை நிராகரிக்கின்றனர். முக்கியமாக, சிறுபான்மை மதத் குழுக்கள், அனைத்து இலங்கையர்களுக்குமான சமாதான வாழ்வினை அடைவதில் தேசிய மட்ட மதத் தலைவர்கள் செயற்படவில்லை என நம்புகின்றனர். யுத்தகாலத்தில் பெரியவர்களாக (தற்போது 46 மற்றும் அதற்கு மேலான வயதுடையவர்கள்) இருந்தவர்கள் மத்தியில் இந்தக் கருத்து உறுதியாக உள்ளதைக் காணலாம். (வரைபு 20 மற்றும் 21 மற்றும் அட்டவணை 07 இனை பார்க்கவும்)

வரைபு 20: அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட மதத் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக/ உண்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - தேசிய





அட்டவணை 07: அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட மதத் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக/ உண்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - மதம்

| | பௌத்தம் | இந்து | இஸ்லாம் | கிறிஸ்தவம் (ரோமன் கத்தோலிக்கம்) | கிறிஸ்தவம் (ரோமன் கத்தோலிக்கம் அல்லாத) |
|---|---|---|---|---|---|
| பெருமளவு | 16.9% | 5.9% | 12.5% | 4.7% | 18.2% |
| ஓரளவு | 44.6% | 32.8% | 33.6% | 74.4% | 18.2% |
| ஒரு போதும் இல்லை | 35.4% | 44.6% | 37.5% | 18.6% | 63.6% |
| தெரியாது/ நிச்சயமில்லை | 3.1% | 16.7% | 16.4% | 2.3% | 0.0% |
| பதிலளிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை | 1004 | 186 | 128 | 43 | 11* |

*பதிலளிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை மிகவும் குறைவு

வரைபு 21: அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட மதத் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக/ உண்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - வயது, பிரதேசம் மற்றும் பாலினம்



மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) என்பது ஒரு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகியவற்றின் மீது அவதானம் செலுத்துகிறது. இது, பொதுக்கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதுடன் அது வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையால் 1996 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுக்கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல் மற்றும் அதை விரிவாக்குதல் குறித்த ஆய்வு மற்றும் அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணிப்புடன் செயல்படுவதற்கு உறுதிபூண்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA)
முகவரி: 6/5, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி: +94112081384-6
இணையதளம்: http://www.cpalanka.org
வலைதளம்: www.cpalanka.org
முகநூல்: www.facebook.com/cpasl
டுவிட்டர்: @cpasl

Marking Social Research Count

சோஷல் இன்டிகேட்டர் (SI) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கருத்துக்கணிப்பு ஆய்வுப் பிரிவாகும். இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நிரந்தரமானதும், தொழில்முறையானதும் மற்றும் சுயாதீனமானதுமான ஒரு கருத்துக்கணிப்பு நிலையத்திற்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 1999ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கருத்துக்கணிப்பு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையின் உந்துதலால், சோஷல் இன்டிகேட்டர் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஏராளமான சமூக - பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் குறித்து கருத்துக்கணிப்புக்களை நடாத்தி வருகின்றது.

சோஷல் இன்டிகேட்டர்
முகவரி: 6/1B, 1/1, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி: +94112826010
இணையதளம்: http://cpalanka.org/survey-research/

CPA
Centre for Policy Alternatives

25 YEARS 1996 - 2021
CENTRE FOR POLICY ALTERNATIVES